### இஸ்லாமியர்கள் வந்தேறிகள் என்றால், ஆரியர்களும் வந்தேறிகள்தான்! அரசியல் சட்டத்தின் விழுமியங்களை அழித்துக்கொண்டிருக்கும்

# பிரதமர் மோடி அரசியல் சட்டத்தை முத்தமிடுவது வேதனையானது!

## நாடாளுமன்ற மக்களவையில் – ‘நீட்’ ரத்து – சாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி ஆ.இராசா எம்.பி. உரை!

புதுடெல்லி, ஜூலை 3-

**நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் உரையாற்றிய கழக உறுப்பினரும் கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா, ‘நீட்’ ரத்து மற்றும் சாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி உரையாற்றுகையில், “இஸ்லாமியர்கள் வந்தேறிகள் என்றால், ஆரியர்களும் வந்தேறிகள்தான்! அரசியல் சட்டத்தின் விழுமியங்களை அழித்துக் கொண்டிருக்கும் பிரதமர் மோடி அரசியல் சட்டத்தை முத்தமிடுவது வேதனையானது” என்று குறிப்பிட்டார்.**

நாடாளுமன்ற மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் ஆ. இராசா பேசியதாவது :

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டும் அதற்கு நன்றி தெரிவித்தும் நான் உரையாற்றுவது என்பது இந்த உரையின் தன்மைக்காக அல்ல, ஒன்றிய அரசு தயாரித்த அந்த உரையை சகிப்புத்தன்மையோடும் பொறுமையோடும் வாசித்ததற்காக நன்றி தெரிவிக்கவே நான் இந்த உரையின் மீது உரையாற்றுகிறேன்.

இந்த உரையில், மூன்றாவது முறையாக அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சி அமைத்துள்ளதாக பெருமையோடு குறிப்பிடப் பட்டுள்ளது. அந்தப் பெருமைக்கு நீங்கள் உரியவர்கள்தானா என்பதை மனசாட்சியோடு எண்ணிப் பார்க்கவேண்டுகிறேன். இந்த அவையில் பிரதமர் மோடியும் பா.ஜ.க.வும் தனித்து 370 இடங்களிலும் கூட்டணிக் கட்சிகளோடு 400 இடங்களிலும் வெற்றி பெறுவோம் என்று மார்தட்டிக் கூறினார்கள்.

ஆனால் அவர்களுக்குக் கிடைத்திருப்பது 240 தொகுதிகள் மட்டுமே! இந்த 240 தொகுதிகள், எப்படிப் பெரும்பான்மை ஆகும் என்பதை மோடிக்கு எந்த கணிதப் பேராசிரியர் சொல்லிக் கொடுத்தார் என்று தெரியவில்லை (சிரிப்பு)



### திராவிட கருத்தியல்

இந்த அவைக்கு 32 வயதிலேயே வந்தவன் என்ற முறையில் திராவிடக் கருத்தியலை உருவாக்கி அந்தக் கருத்தியலுக்கு உருவம் தந்த தந்தை பெரியார் அதனைப் பாதுகாத்து அரியணை ஏற்றிய அண்ணா, கலைஞர் - அவர்களுக்குப் பிறகு இந்தக் கருத்தியலை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து அரசாட்சி நடத்தும் மு.க.ஸ்டாலின் ஆகிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில், இந்த திராவிட மண்தான் 2வது முறையாக மோடியின் மதவாத, காவி அரசியலை வெறுத்து ஒதுக்கியிருக்கிறது. அதற்காக நான் தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடக்கு - தெற்கு என்று பல பேதங்கள் பேசப்படும் இந்த தேசத்தில் முதல்முறையாக திராவிடக் கருத்தியலை ஏற்றுக் கொண்டு உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய வடமாநிலங்களிலேயும் பா.ஜ.க.வுக்கு எதிராக மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் குடியரசுத் தலைவர் உரையில் கற்பனை வாதத்தோடு கட்டமைக்கப்பட்ட புதிய நம்பிக்கைகளை - வேலை இல்லாத் திண்டாட்டம், பெருகிவரும் ஏழ்மை, பெட்ரோல் - டீசல் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு உள்ளிட்ட - நாங்கள் எழுப்பிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் என்ன நம்பிக்கையை இதுவரை வழங்கியிருக்கிறீர்கள், இந்தப் புதிய வாக்குறுதியை நாங்கள் நம்புவதற்கு !

இன்னொரு மிகப்பெரிய வேடிக்கை; அரசியல் சட்டத்தை ஆட்சி அதிகாரத்துக்கு மட்டுமல்லாமல், பொதுமக்களின் விழிப்புணர்வுக்கான சாதனமாக மாற்றப் போகிறோம் என்று அறைகூவல் விடுத்திருக்கிறீர்கள். அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

### சமதர்மத்தை நீங்கள் மதித்ததுண்டா?

அரசியல் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ள ஜனநாயகத்தை நீங்கள் மதித்தது உண்டா? அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சமதர்மத்தை நீங்கள் மதித்ததுண்டா? மதச் சார்பின்மையை நீங்கள் மதித்ததுண்டா? குடியரசுத் துணைத் தலைவர், அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பண்புகளை மாற்ற வேண்டும் என்று கொக்கரிக்கிறாரே, அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும் என்கிற நீங்கள், அரசியல் சட்டத்தைத் தொட்டு வணங்குவது யாரை ஏமாற்ற?

இந்த நேரத்தில், தமிழ்நாட்டின் சார்பில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

‘நீட்’ குறித்து இங்கு ராகுல் காந்தி அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார். முதன்முதலாக தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப் பட்டபோது, தகுதி பற்றியும் திறமை பற்றியும் கூப்பாடு போட்டவர்கள் யார்? நீங்கள்தானே! உங்கள் முன்னோர்கள்தானே! இன்று ‘நீட்’டில் தகுதியும் திறமையும் எங்கே போயிற்று?

### இதுதான் உங்கள் சமூக நீதியா?

வசதி இருந்தால் ‘மேனேஜ்மெண்ட் கோட்டா’ என்கிற, நிர்வாக இடஒதுக்கீட்டில் குறைந்த மதிப்பெண் பெற்றவர்களும் இடம் பெறுகிறார்கள். அதிக மதிப்பெண் பெற்ற ஏழைகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதுதான் உங்கள் சமூக நீதியா?

கடந்த 10 ஆண்டு கால உங்களின் ஆட்சியில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், மலைவாழ் மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வை விதைத்து தேர்தல் அறுவடை செய்தீர்கள். பிரதமர் அவர்கள், இஸ்லாமியர்களின் வருகையை, “ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முந்தைய அடிமைத் தனம்” என்று குறிப்பிடுகிறார். இஸ்லாமியர்களை, “அந்நியர்” என்கிறார். காந்தியும் - நேருவும் வெள்ளையர்களைக் கொண்டு இங்கு ஆட்சி நடத்திய பிரிட்டிஷ்காரர்களை அந்நியர் என்றார்கள். நான் இந்த அவைக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நீங்கள் இஸ்லாமியர்களை அந்நியர்கள் என்று அடையாளப் படுத்துவீர்களானால், இந்து மதத்தில் இன்றைக்கு இருக்கும் உயர் ஜாதிக்காரர்களான ஆரியர்களும் அந்நியர்கள்தான். அம்பேத்கர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார். “இந்தியாவை யாரேனும் சொந்தம் கொண்டாடவிரும்பினால், அதற்குத் தகுதி உள்ளவர்கள். திராவிடர்கள் மட்டுமே” என்று கூறினர். மறந்து விடாதீர்கள்.

இன்னொன்று சாதிவாரிக் கணக்கெடுப்பு. நீங்கள் மதத்தை முன்வைத்து அரசியல் நடத்துகிறீர்கள். ‘இந்து மதம் என்பது, சாதிகளின் தொகுப்பு’ என்று அம்பேத்கர் கணித்தார். தந்தை பெரியார் அவர்கள், அதனை ஒழிக்கப்பாடு பட்டார்.

ஒரு சமுதாயத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருள்களையும் ஒரு தனி மனிதன் உற்பத்தி செய்ய முடியாது. நான் போட்டிருக்கிற சட்டைக்கு எங்கோ ஒருவர் பருத்தியை விதைக்க வேண்டும். பின்னர் அந்தப் பருத்தியை வேறு ஒருவர் நெய்து தர வேண்டும். பிறகு எனக்காக ஒருவர் துணியை சட்டையாகத் தைத்துத் தர வேண்டும். இவைகள் எல்லாம் உலகளாவிய தொழில்கள். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் இந்துமதம் தொழிலைப் பிரிப்பதற்குப் பதிலாக தொழிலாளர்களைப் பிரித்து சாதியாக்கியது.

இன்றைக்கு ஏன் ஒரு துப்புரவுத் தொழிலாளி பரம்பரை பரம்பரையாக; ஏன் பரம்பரை பரம்பரையாக ஒரு தச்சர், ஏன் பரம்பரை பரம்பரையாக கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்தவர் - பிராமணர் உழைப்பில்லாமல் வாழ்கிறார். இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து கல்வி - வேலை வாய்ப்பில், பொருளாதாரத்தில் சாதி காரணமாக பின்தங்கிய மக்களுக்கு முன்னேற்றம் வழங்குவதுதான் சாதிவாரிக் கணக்கெடுப்பின் நோக்கம். அதை நிறைவேற்ற எங்கள் முதல்வர் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்த உரையில் அதுகுறித்து எதுவும் இடம் பெறவில்லை.

நிறைவாக உங்களுக்கு ஒரு அறிவுரை கூற விரும்புகிறேன்.

இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்றால், உங்களுக்கு சந்திரபாபு நாயுடுவும், நிதிஷ்குமாரும் நிர்பந்திக்கப்பட்ட கூட்டாளிகளாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய மக்களின் மனங்களை ஆள வேண்டுமானால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சார்ந்திருக்க வேண்டும். இல்லையேல், விரைவாகவோ அல்லது கால தாமதமாகவோ நீங்கள் ஆட்சியில் இருந்து தூக்கியெறியப்படுவீர்கள்.

இவ்வாறு மக்களவையில் ஆ.ராசா உரையாற்றினார்.

---

### விக்கிரவாண்டி தொகுதியில்

# பா.ம.க. வேட்பாளர் டெபாசிட் இழப்பது உறுதி!

## காணை ஒன்றியத்தில் அமைச்சர் எ.வ.வேலு பிரச்சாரம்!

விழுப்புரம், ஜூலை 3-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் காணை வடக்கு ஒன்றியத் திற்குட்பட்ட ஊராட்சிகளில் இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை 07.30மணி முதல் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்குச் சேகரித்தார்.



நிகழ்ச்சியில் சட்டப் பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜ், அ.செ.வில்வநாதன், பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், ஜி.ரவிச்சந்திரன், அ.ச.பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நல்லாப்பாளையம், கடையம், புதுக்கருவாட்சி, பழைய கருவாட்சி, சி.என். பாளையம், வெள்ளையாம் பட்டு, நங்காத்தூர், சங்கீத மங்கலம், உமையாள்புரம், பனமலைபேட்டையில் ராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பொது மக்களிடம் வாக்கு சேகரித்த போது, கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா இந்த பகுதியை சேர்ந்த உங்களில் ஒருவரான அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்திற்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த பகுதியில் ஒருவார காலமாக தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகிறேன் நான் பார்த்த அளவில் எதிர்த்து நிற்கும் வேட்பாளர் டெபாசிட் இழப்பது என்பது உறுதியாகி விட்டது, இதற்கு காரணம் கடந்த மூன்று ஆண்டுகால ஆட்சியில் தமிழக முதல்வர் பொது மக்களுக்கு அறிவித்துள்ள எண்ணற்ற திட்டங்களால் நல்லாப்பாளையம் ஊராட்சிக்கு மட்டும் 2 கோடியே 14 இலட்சம் ரூபாயில் திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு வாக்குச் சேர்த்தார்.

அமைச்சர் வாக்குச் சேகரித்த போது அங்கிருந்த பொது மக்கள், வேட்பாளர் அன்னியூர் சிவா எங்கள் பகுதியை சார்ந்தவர் நாங்கள் எல்லாம் முடிவு செய்து விட்டோம். எங்கள் வாக்கு உதயசூரியன் சின்னத்திற்கு என்று கூறினார்கள்.


**பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை**

மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி1/1349/2023

**குறுகிய கால மறு மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் குறுகிய கால மறு மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5, வார்டு 58ல் ரிப்பன் கட்டிடத்தில் உள்ள மாமன்ற கூடத்தில் இருக்கும் Analog ஒலிபெருக்கி அமைப்பை (Public Addressing System) மேம்படுத்துவதற்கான சிஸ்டம் சர்வர் மென்பொருள் உள்ளிட்ட டிஜிட்டல் இன்டர்ஃபேஸ் யூனிட்கள், ஆடியோ பவர் ஸ்விட்சிங் சாதனங்கள், கேபிள் மற்றும் துணைக்கருவிகளுடன் புதிய ஐபி அடிப்படையிலான மாடுலர் டிஜிட்டல் ஃப்ளஷ் மவுண்ட் கான்ஃபரன்ஸ் சேர்மன் மற்றும் டெலிகேட் யூனிட்களை வழங்கி, நிறுவி, சோதித்து மற்றும் இயக்கி வைக்கும் பணி.

**பணியின் மதிப்பு : ரூ. 3,37,25,739.70 முன் வைப்புத் தொகை : ரூ. 3,37,260/-**

ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **11.07.2024 முற்பகல் 3.00** மணிக்குள் பங்கேற்கலாம், **12.07.2024 பிற்பகல் 3.15 மணிக்கு** ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 2154 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**




விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கப்பியாம்புலியூர் மற்றும் வடக்குச்சிபாளையம், பகுதியில் வாக்குச் சாவடி பூத்களில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினார். இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

### ஆற்காடு தொகுதி – விளாப்பாக்கம் பேரூராட்சியில்

# கிராம நிருவாக அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் கேள்வி!

சென்னை, ஜூலை 3-

சட்டப்பேரவையில் ஆற்காடு தொகுதி உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அளித்த பதில் வருமாறு:-

**ஜெ.எல். ஈஸ்வரப்பன்:** ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலகத் திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதியொதுக்கீடு தொடர்பாக உரிய மதிப்பீடு பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**ஜெ.எல்.ஈஸ்வரப்பன்:** முதலமைச்சர் அவர்களையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.



அமைச்சர் அவர்கள் இப்போது பொதுப் பணித் துறையின்மூலம் ESTIMATE கொண்டு வந்தால் செய்து தருவதாக சொல்லியிருக்கிறார்கள். மேலும், அதே போன்று, ஆற்காடு ஒன்றியம், வளவனூர் ஊராட்சி, செம்பேடு ஊராட்சி, கீராம்பாடி ஊராட்சி, அத்திதாங்கல் ஊராட்சி, கணியம்பாடி ஒன்றியத்தில், மோத்தக்கல், மோட்டுப்பாளையம், பாலாத்துவண்ணான், சலம் நத்தம், சாத்து மதுரை, வேப்பம்பட்டு, மற்றும் திமிரி ஒன்றியத்தில் பரதராமி, விலாரி ஆகிய ஊராட்சிகளில் VAO அலுவலகங்கள் இல்லாமல் இருக்கின்றன. அங்கே,குடியிருப்புகளுடன்கூடிய VAO அலு வலகங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** இதே போன்ற குறைகள் பொதுவாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்துக் கொண்டு, நிதி நிலைக்கேற்ப அந்தப் பணிகளை நாங்கள் செய்து கொடுப்போம்.

**ஜெ.எல். ஈஸ்வரப்பன்:** ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ள பொது மக்கள், மாணவர்கள், விவசாயிகள் அனைவரும் அரசு சார்ந்த கையொப்பம் மற்றும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஒரே வருவாய்க் கிராமமாக உள்ள, 5,000 மக்கள்தொகை கொண்ட கம்மவான்பேட்டை மற்றும் கம்மசமுத்திரம் ஊராட்சிகளை தனித் தனி வருவாய்க் கிராமமாகப் பிரிக்கவும், மேலும், நஞ்சுகொண்டாபுரம் மற்றும் கத்தாழம்பட்டு ஊராட்சிகளை தனித் தனி வருவாய்க் கிராமமாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலளித்தார்.

---

## புதுடெல்லி சரக்கு ரயில் விபத்து

புதுடெல்லி, ஜூலை 3-

டெல்லியில் இருந்து அம்பாலா நோக்கி சென்று கொண்டிருந்த சரக்கு ரெயில் விபத்தில் சிக்கிய சம்பவம் அரங்கேறியது.

சரக்கு ரெயில் ஹரியானா மாநிலம் கர்னாலில் உள்ள தாரோரி அருகே சென்று கொண்டிருந்த போது அதிகாலை 4 மணி அளவில் விபத்துக் குள்ளானது.

இதில் சரக்கு ரெயிலின் எட்டு கண்டெய்னர்கள் தண்டவாளத்தில் கவிழ்ந்த தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த ரெயில் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து டெல்லி அம்பாலா வழித்தடத்தில் ரெயில் போக்குவரத்தை நிறுத்தினர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை வடக்கு ஒன்றியம், நல்லாப்பாளையம் ஊராட்சியில் 1, 2, 3 ஆகிய வாக்குச்சாவடிகளில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் அ.சிவாவை ஆதரித்து திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினரு மான க.தேவராஜி வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ஆ.சம்பத்குமார், வி.சி.க. ஒன்றிய கழகச் செயலாளர் ஆசைத்தம்பி, வி.எஸ். சாரதிகுமார், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கவிதாதண்டபாணி, கே.ஆர். திருப்பதி, டி.அசோக்குமார், எம்.டி.சீனிவாசன், சத்தியநாராயணன், வீ.வடிவேல், எம்.சிங்காரவேலன், சி.எஸ்.பெரியார்தாசன், ராஜேந்திரன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.